செ.வெ.எண்: 29 நாள்: 09.02.2017

**விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உணவு தானியக்கிடங்கு கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட உணவு தானியக்கிடங்கு கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிதாக கட்டப்பட்ட உணவு தானியக்கிடங்கு கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், விராலிமலை, இராஜகிரி ஊராட்சி, இராஜகிரி மற்றும் குளவாய்ப்பட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் தலா ரூ.8 இலட்சம் என மொத்தம் ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உணவு தானியக்கிடங்கு கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு தேவையான உணவுப்பொருட்கள் பாதுகாப்பாக சேமித்து வைக்க முடியும்.

மேலும் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று பல்வேறு புதிய பகுதி நேர மற்றும் முழுநேர நியாயவிலைக்கடைகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை இருப்பிடத்தின் அருகிலேயே பெற்று பயன்பெறுகிறார்கள். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று விராலிமலையில் புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டுள்ளதுடன், புதிய தொழிற்பயிற்சி நிலையமும் திறந்து வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதே போன்று ரூ.310 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டுக்குடிநீர்த்திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டு பெரும்பாலான பணிகள் தற்பொழுது முடிவுற்று விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.திருமூர்த்தி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பழனியாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.செல்வராஜ், திரு.சுப்பிரமணியன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.பெரியசாமி, திரு.கிருஷ்ணன், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**